தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

அரையாண்டுப் பரீட்சை 2026

ஆண்டு: 8 திகதி: 13.06.2026

நேரம்: 2:00 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

ஆசிரியர்: திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	25	
வினா 3	15	
வினா 4	10	
வினா 5	10	
வினா 6	25	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

பின்வரும் நேர்முக வர்ணனையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

வணக்கம் நேயர்களே!

இப்பொழுது உங்களுக்காக சிட்னி விளையாட்டு அரங்கில் இருந்து உங்களுடன் பேசிக் கொண்டிருப்பவர் கபிலன். இன்னும் சில நிமிடங்களில் அவுஸ்ரேலிய இந்திய அணிகளின் முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாக உள்ளது. பூவா தலையா போட்டுப் பார்த்ததில் இந்திய அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துள்ளது. இம்முறை இந்திய அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது. அதேவேளை அவுஸ்திரேலிய அணியில், மூன்று அனுபவம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பது அந்த அணிக்கு மேலும் பலம் சேர்க்கின்றது.

இதோ போட்டி ஆரம்பமாகவுள்ளது.

1. ஒருநாள் கிரிக்கெட் போட்டி எந்த விளையாட்டரங்கில் நடைபெறுகின்றது?

_____

_____

2. கிரிக்கெட் போட்டியில் மோதும் அணிகள் எவை ?

_____

_____

3. முதலில் துடுப்பெடுத்தாடும் அணி எது?

_____

_____

4. நேர்முக வர்ணனை வழங்கிக் கொண்டே இருப்பவர் யார்?

_____

_____

5. அவுஸ்திரேலிய அணியில் எத்தனை அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர்கள் உள்ளார்கள்?

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	25	பக்கம்	4

பின்வரும் உரைப்பகுதியை கருத்தூன்றிப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வீரமாமுனிவர் என்பவர் தமிழ் மொழிக்கு அருந்தொண்டு ஆற்றிய ஐரோப்பிய அறிஞர்களுள் ஒருவர். இவர் இத்தாலி நாட்டில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்ட் சியூஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். அவர் ஒரு பாதிரியார்.
வீரமாமுனிவர் இளமைக் காலத்தில் இருந்தே பல மொழிகளை கற்பதில் ஆர்வம் உடையவராக இருந்தார். 1710 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து தமிழ்நாட்டில் சமயத் தொண்டு புரிய தொடங்கினார். அவர் தஞ்சாவூர் அரியலூர் மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார்.

வீரமாமுனிவர் தம் சமயத்தை தமிழ்நாட்டில் பரப்ப வேண்டும் என்ற ஆவலில் தமிழ் பயின்றார். அதனால் அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத்தேறினார்.

தமிழில் தானே நூல் எழுதும் ஆற்றலைப் பெற்றார். பல இந்திய மொழிகளைக் கற்ற வீரமாமுனிவர் தமிழ் மொழியின் மீது அதிகப்பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார். வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு பாராட்டுக்குரியது. அவர் தமிழில் தேம்பாவணி என்னும் பெரும் காப்பியத்தை பாடினார். அவர் இலக்கண இலக்கிய நூல்களோடு பரமார்த்த குரு என்ற நகைச்சுவை கதை நூலையும் படைத்துள்ளார். முதன் முதலில் தமிழில் அகராதியை உருவாக்கியவர் இவர் ஆகும். திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தின் மொழியில் இவர் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின் மூலம் ஐரோப்பியர்களும் திருக்குறளின் பெருமையை அறிந்து கொள்ள முடிகிறது.

1 வீரமாமுனிவர் எந்த நாட்டை சேர்ந்தவர்?

_____

_____

2 அவருக்கு எதில் அதிக நாட்டம் ஏற்பட்டது?

_____

_____

3 வீரமாமுனிவர் தமிழில் நூலியற்றம் திறனை எவ்வாறு பெற்றார்?

_____

_____

4 தேம்பாவணி என்பது யாது?

_____

_____

5 ஐரோப்பியர் திருக்குறளின் சிறப்பை எவ்வாறு தெரிந்து கொண்டார்கள்?

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	5

பின்வரும் விடயத்தை 60 சொற்களுக்கு குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

அன்று சனிக்கிழமை ஆதலால் எல்லோரும் வீட்டில் இருந்தோம். நான் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் இல்லாமல் விழித்தவாறு படுத்திருந்தேன். அம்மா என்னை தமிழ் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என எழுந்திருக்கும் படி கூறினார். நானும் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு தயாரானேன். அப்பொழுது நமது வீட்டின் பின்புறத்தில் ஜன்னல் வழியாக புகை வருவதை கண்டேன். உடனே வெளியே சென்று பார்த்தபோது மேல் மாடியில் இருந்தவர் வீட்டில் தீப்பிடித்து மற்ற வீடுகளுக்கு பரவுவதைக் கண்டேன். மேல் மாடியில் இருந்தவர்கள் வேகமாக இறங்கினார்கள். நான் உடனே தொலைபேசியை எடுத்து 000 என்ற எண்ணுக்கு அழைத்து உதவி கேட்டேன்.

(தொடர்ந்து எழுதுக)

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	7

சிறு குறிப்பு எழுதுக (3 வசனங்களுக்குக் குறையாமல்)

1 எழுதும் திறனை எப்படி வளர்த்துக் கொள்ளலாம்?

2 தாஜ்மஹால்.

3 சல்லிக்கட்டு.

4 ஓய்வின்றி வேலை செய்பவர்கள் அடையக்கூடிய பாதிப்புகள்.

வினா இல	5	புள்ளிகள்	10	பக்கம்	9

கேட்டுக் கிரகித்தல்.

உரைப் பகுதியைக் கேட்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

	இங்கே குறிப்பெடுக்கவும்
1. நீர் கேட்ட உரைப்பகுதி எதைப் பற்றிக் கூறுகின்றது ?	
2. முக்கனிகள் எவை?	
3. இந்த உரைப் பகுதியில் குறிப்பிட்ட முக்கனிகள் அல்லாத நான்கு பழங்கள் யாவை?	
4. உடல் ஆரோக்கியமாக நீண்ட நாட்கள் வாழ்வதற்கு எதை உணவுடன் சேர்த்து உண்ண வேண்டும்?	
5 பழங்களின் குணங்கள் எவை	

வினா இல	6	புள்ளிகள்	25	பக்கம்	10

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1 "புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் தங்கள் கலாச்சாரத்தை தொடர்ந்து பாதுகாக்க முடியும்." இந்தக் கூற்றை ஆராய்ந்து கட்டுரை எழுதுக

2 தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையைப் பற்றி எழுதுக.

3 பார்த்து மகிழ்ந்த படம் அல்லது புத்தகம் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.